

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## நமக்கு மிஞ்சின காரியங்களில், கர்த்தரே நமது சகாயர்!

தேவன் வாசம் செய்திடும் உங்கள் வீடு அல்லது அவரது சபை ஆகிய இரண்டு இடங்களுமே ஜீவியத்திற்கும், ஊழியத்திற்கும் பிரதான ஸ்தலமாகும்! அங்கு தேவனுடைய சமாதானத்திற்கோ, கர்த்தரின் மகிழ்ச்சிக்கோ அல்லது கர்த்தருடைய பரிசுத்தத்திற்கோ 'குலைச்சல்' ஏற்படும்போது, அதை நாமே சரிசெய்திட முயல்வது அற்பமானது மாத்திர மல்ல.... அகந்தையான செயலுமாகும்! 'அந்த தடுமாற்றத்தை' கர்த்தரே சரிசெய்திட அவர் முன் பணிந்து வேண்டி நிற்பதே ஏற்புடையதாகும்!

இதற்கு மாறாக, தன் 'வீட்டிலிருந்து' புறப்பட்ட உடன் படிக்கை பெட்டியின் 'தள்ளாட்டத்தைத்' தானே சரிசெய்திட கரம் நீட்டிய 'ஊசாவை' கர்த்தர் வன்மையாய் கண்டித்தார் என 2சாமு.6:4-7-ம் வசனங்களில் காண்கிறோம்! அதை "எனக்கு மிஞ்சின காரியத்தில் தலையிடும் அகந்தை" என்றே சங்கீதம் 131:1 கூறுகிறது! நாமோ, நம்மை தாழ்த்தி, அந்த சூழ்நிலை முதல் தொடங்கி கர்த்தரையே நம்பியிருப்பதுதான் மேலான ஜெயமாகும்! (சங்.131:3).

_tr

பெட்டகம் 23 | செப்டம்பர் 2021 | பரல்கள் 09



## 'ஸ்திரீகளால் கறைபடாதவர்கள்' நிறைந்த பரலோகம்!

இரட்சிக்கப்பட்ட ஒருவனை, "ஐந்து ரூபாய் கொடுத்து சிட்டிபஸ்ஸில் ஏறும் அந்த பயணத்தில், அங்குள்ள யுவதிகளால் அவன் கறைபட்டு, அவன் இரட்சிப்பை இழக்க வைப்பேன்!" என்றே அசுத்தபன்றிகளின் மேய்ப்பனாகிய சாத்தான் கொக்கரிக்கிறான்!

"என்ன, 2 - stage தாண்டி இறங்கும் இந்த சிட்டிபஸ் பயணத்திற்குள்ளாக என் இரட்சிப்பை இழப்பதா?" என குமுறும் உத்தம சீஷன் மாத்திரமே.... ஆவியில் நிறைவான்! கிறிஸ்துவினுடையவனாய், தன் மாம்சத்தையும் அதன் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்து...'ஸ்திரீகளால்' கறைபடாது, "தேவனுக்குமகிமை" சேர்த்து, சிட்டிபஸ்ஸிலிருந்து இறங்குவான்!

இவர்களையே 'பூமியிலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள்' என பரலோகம் கொண்டாடுகிறது! யார் இந்த பாக்கியம் பெற்ற பரிசுத்தவான்கள்? என்ற கேள்விக்கு, அங்கு பரலோகம் தந்த பதில் "இவர்கள் ஸ்திரீகளால் கறைபடாதவர்கள்! கற்புள்ள கன்னியர்கள்!!" என எதிரொலித்தது! (வெளி.14:3,4).

*-Ed*


**2021 'பரலோக பொக்கிஷங்கள்' – வருட சந்தா ரூ.150.00**

சந்தா புதுப்பிக்காதவர்கள் **செப்டம்பர் 12-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.**125.00** அனுப்புங்கள். அயல்நாடு ஒரு பிரதி ரூ.**900/-** அனுப்ப வேண்டும்.

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்!**
**அசல் உயர்த்தி போலி அகற்றும்!**
**சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
A/c no: **502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)



கடித தொடர்பு : **PARALOGA POKKISHANGAL**, 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.), Madurai - 625 018, S.India Cell : 9843049935 Ph: 0452 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## ‘கஷ்டபாடுகள்’ ஒரு கிறிஸ்தவனுக்கும் இல்லை!

நமக்கு “*அதிசீக்கிரத்தில் நீங்கும் உபத்திரவமே....*” உள்ளது *(2கொரிந்தியர் 4:16-18).* *இந்த வசனத்தை நீங்கள் அப்படியே விசுவாசித்து விட்டீர்களா? ஆம், உபத்திரவம் “சுருக்கமானது” என்பதை விசுவாசியுங்கள்! அப்படியே மிதமிஞ்சிப் போனால், நூறு வருடங்கள் தான்! இன்னும் கேளுங்கள், “அதிசீக்கிரத்தில் நீங்கும்* **லேசான** *நம்முடைய உபத்திரவம்!” என்றும் இந்த வசனம் கூறுகிறது. இதென்ன.... நமக்கு ஏற்படும் ஏராளமான உபத்திரவங் களும் பரீட்சைகளும் ‘லேசானது’ என எழுதப்பட்டிருக்கிறதே! ஆனால், அவைகளை ‘பாரமானது’ என்றல்லவா இன்று வரை நீங்கள் எண்ணியிருந்தீர்கள். சரிதான், அவை யாவும் உங்கள் மானிட மாயைக்கு உட்பட்ட சொந்த அபிப்ராயங்கள்!*

> **நீங்கள், எழுதப்பட்ட வார்த்தையை அப்படியே விசுவாசிக்காமல், “உபத்திரவங்களைத் தவறான முறையில் கையாண்டு” பாரமான உபத்திரவத்தை நீங்களே உற்பத்தி செய்து விட்டீர்கள்!**

*நீங்கள் என்னத்தை அபிப்ராயப்பட்டீர்களோ அல்லது எண்ணினீர்களோ அவைகளைத்தான் விசுவாசித்துவிட்டீர்கள். இன்று ஓர் உண்மையைக் கேளுங்கள்..... உங்கள் சொந்த நினைவும், அபிப்ராய உணர்ச்சிகளும் தவறு!*

*அறிவியல் பாடத்தில் நான் படித்த ஓர் உண்மையை இங்கு கூற விரும்புகிறேன். அப்பாடம் கூறுவது யாதெனில், “உஷ்ணத்தை அளப்பதற்கு, நம் சரீரமே ஏற்ற உபகரணமாய் உருவாக்கப்பட்டதல்ல” என்பதுதான். ‘உஷ்ணமானியே’ உஷ்ணத்தை அளக்கும் சரியான உபகரணமாகும். இதை நிரூபிக்க, விஞ்ஞானத்தில் எத்தனையோ நிரூபணங்கள் உண்டு. ஓர் பருமனான பெண்மணியைக் குறித்து பக்தன் J.O.ஸ்மித் அவர்கள் கூறிய நிகழ்ச்சியை வைத்து விளக்கிட விரும்புகிறேன்.*

> *புகைவண்டியில் J.O.ஸ்மித் அவர்கள் அமர்ந்திருந்த இருக்கைக்கு அருகில் ஒரு பெண்மணி வந்து அமர்ந்தாள். அப்பெண்மணி, தன் மீது ஒன்றன் மீது ஒன்றாக இரண்டு அல்லது மூன்று ‘சால்வ்’ ஆடைகளை உடுத்தியிருந்தார்கள்.*

*அச்சமயம் அப்பெண்மணி, “சே... சே... பயங்கர உஷ்ணமாயிருக்கிறதே! ஜன்னலைத் திறந்து விடுங்கள்” எனக் கூறினார். அங்கு அமர்ந்திருந்த சகோதரன் J.O.ஸ்மித், “இங்கே சிறிதுகூட உஷ்ணமில்லையே! சீதோஷ்ண நிலை நன்றாகவேதான் இருக்கிறது!” எனப் பதிலுரைத்தார். இவ்வாறிருக்க, அப்பெண் மணிக்கு மாத்திரம் ஏன் உஷ்ணமாயிருந்தது? ஆம், தன் மீது அடுக்கடுக்காக ஆடைகளைப் போட்டுக்கொண்டு, அப்பெண் மணிதான் அதிகளவு உஷ்ணத்தை உருவாக்கிக் கொண்டார்கள். அவ்வாறிருக்க, புகைவண்டியில் உள்ள காற்றுமண்டலம்தான் உஷ்ணமாயிருக்கிறதென அப்பெண்மணி ‘சொந்தமாய்’ அபிப்ராயம் கொண்டார். இப்பெண்மணியைப் போன்ற அவல நிலையில்தான் இன்று அநேகர் இருக்கிறார்கள்!*

இவ்வாறு, நாமே கஷ்டங்களை உருவாக்கி சுமந்துகொண்டு, உண்மையை (தேவ வசனத்தை) மறுக்கிறோம். அவ்விதமே அப்பெண்மணி உண்மைக்கு மாறாய், தேவையற்ற துயரம் கொண்டிருந்தாள். இனி தொடர்ந்து கவனியுங்கள், “நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான **நித்திய கனமகிமையை** கொண்டு வந்து தருகிறது” என்ற சத்திய வேதத்தின் அறைகூவலைப் பாருங்கள்! கைமேல் கிடைக்கும் இப்பிரதிபலன்கள், உங்களில் யாருக்காவது ‘கஷ்டபாடாகத்’ தோன்றக் கூடுமோ? இதற்கு நாம் என்ன பதில் கூற முடியும்? சத்திய வசனம் சொல்வது மாத்திரமே உண்மை, பிற அனைத்தும் பொய்.... கவனம், தடுமாறாதீர்கள்!

‘தீமைக்கு நன்மை செய்ய வேண்டுமென’ சத்தியவேதம் கூறுவதை நாம் யாவருமே அறிந்திருக்கிறோம். அப்படியானால், நாம் சந்திக்கும் தீமைகள்தானே உபத்திரவத்திற்கும் காரணமாய் உள்ளன. இதுவே, நமக்கு இப்போது பரீட்சையாகவும் உள்ளது!

**இந்த பரீட்சையில், அத்தீமைக்கு நான் நன்மை செய்துவிட்டால், அதுவே பரீட்சைக்குரிய விடையாகி, நம்மை ஆனந்தக் களிப்பில் ஆழ்த்தி விடுமல்லவா!**

இவ்வாறு, நான் என்ன செய்ய வேண்டுமென சத்திய வேதம் கூறுவதை நான் செய்துவிட்டால், “விடை கிடைத்து” அதுவே, நம்மை மகிழ்ச்சியின் உச்ச அலைக்கு நம்மை கொண்டு சென்று விட முடியும்!

ஆனால் ‘இதற்கு மாறாகவே’ ஜனங்கள் செயல்படுவதால், அவர்கள் தீமையின் அலைக்குள் இழுத்துச் செல்லப்பட்டு, “**எனக்கு** இழைக்கப்பட்ட தீமையின் பயங்கரம் மகா கொடியது.... இதுபோன்ற கொடிய தீமையை அவர்கள் **எனக்கு** எப்படிச் செய்யலாம்?....”

*என்றெல்லாம் புளுங்கித் தவிக்கிறார்கள். இப்படியெல்லாம் நீங்கள் புளுங்குவதும்... தவிப்பதும்.... சரிதான் என, வேதத்தில் எங்கேயாவது எழுதியிருக்கிறதா? நீங்கள் தீமைக்கு நன்மை செய்ய வேண்டும் என்று மட்டும்தானே எழுதியிருக்கிறது! அப்படியானால், ஒரு நன்மை செய்வதற்கு யாரும் புளுங்கித் தவிக்கத் தேவையில்லையே!? இன்று ஜனங்களோ, எழுதப்பட்ட வேத வாக்கியத்திற்கு எதிர்முரணான காரியங்களைச் செய்து கொண்டு, 'இது கடினமான சுமை' என்று சொல்கிறார்கள்! இப்படித்தான் நீங்களும் இருப்பீர்களென்றால், நீங்கள் "கடினமான சுமையை" இடைவிடாது தொடர்ந்து உற்பத்தி செய்து கொண்டேதான் இருப்பீர்கள்!!*

*தனிப்பட்ட முறையில் என்னுடைய சாட்சியைக் கேளுங்கள்: என் வாழ்க்கையில் ஒரு 'கடின சுமையும்' இல்லை! என, நான் உறுதிபட கூறிட முடியும். ஆம், ஒன்றுகூட இல்லை! இதன் இரகசியம் என்ன தெரியுமா?*

**வேதப்புத்தகத்தில் எழுதப்பட்ட வார்த்தையை அப்படியே விசுவாசிப்ப தற்கும், நான் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என வேதம் கூறுகிறதோ, அப்படியே நடப்பதற்கும் 'ஏற்ற கிருபையை' என் வாழ்க்கையில் பரிசுத்த ஆவி மூலமாய் பெற்றிருக்கிறேன். இதுவே, அந்த இரகசியம்!**

*நீங்கள் தீமையைச் சந்தித்துவிட்டீர்களா? இப்போது, உங்களின் கடந்த கால 'கடின பாரமான' எண்ணங்கள் ஒழியட்டும்! இனிமேலாவது, அதற்கு நன்மை செய்யுங்கள். அப்படியானால் நீங்கள் பூரித்து செழித்து விடுவீர்கள்! பரலோகத்தையே இம்மண்ணின் வாழ்வில் பெற்று மகிழ்ந்து களிகூருவீர்கள்! இப்போது சொல்லுங்கள் 'பொன்னான பாக்கியத்தை' இனியும் 'கஷ்டபாடு' என்று சொல்லுவீர்களோ? போதும், போதும்.... உங்கள் 'கஷ்டபாடான' காரிருள் வாசலை இழுத்து மூடுங்கள்! போயும், போயும் இப்பரிதாபமான சேமிப்பு கிடங்கிற்கு நீங்கள் முதலாளியாய் இருந்திருக்கிறீர்களே! இந்த உலகத்தில், எந்த முதலாளியாவது 'கஷ்டபாடுகளை' கிடங்கில் சேர்த்து வைக்க பிரியப்படுவாரா? ஒருபோதும் மாட்டார்! தனக்கு நிம்மதியையும், மகிழ்ச்சியையும் வழங்கும் பெட்டகங்கள் எதுவோ 'அதையே' ஓர் தொழிலதிபர் தன் கிடங்கியில் சேர்த்து வைப்பார்!!*

*"அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான* **நித்திய கன மகிமையை** *உண்டாக்குகிறது" என்றல்லவா வேதம் கூறுகிறது! (2கொரி.4:17). அதாவது, நீங்கள் உபத்திரவத்தை வேதம் சொல்லுகிறபடியே ஏற்றுக்கொண்டு,*

*அவைகளை 'கஷ்டபாடாக எண்ணாமல்'* **சரியான முறையில் கையாளுவீர்களென்றால்,** *நீங்கள் பெற்றுவிடும் நித்திய கன மகிமை ஒப்பிட முடியாத அளவிற்கு உங்கள் சேமிப்பு அறைகளில் திரட்சியாய் சேர்த்து வைக்கப்படும்!! அப்படியிருந்து விட்டால்.....*

*இந்த லோகத்தில், எந்த மானிடப் பிறவியும் அல்லது எந்த தீய சம்பவங்களும், உங்களின்* **பூரித்த செழிப்பான வாழ்க்கையின் சேமிப்பிற்கு** *எவ்விதத்திலும் பங்கம் ஏற்படுத்திடவே முடியாது, ஒருக்காலும் முடியாது! அல்லேலூயா!!*

*– எலியாஸ் அஸ்லாக்ஸன்*

---

## தியாக சிலுவையை 'உருவழிக்கும்' இன்றைய மாய சிலுவை!

*இன்றைய நாகரீக காலத்தில் 'நவீன சிலுவையின்' அறிமுகம், "பிரபல்யமான சுவிசேஷ சபையாரிடத்தில்" தாராளமாய் புழங்கி வருகிறது! அதை யாரும் விழிப்புடன் கண்டுபிடிக்கவும் இல்லை! இந்த நவீன சிலுவை கொண்டுவரும் கிறிஸ்தவ ஜீவியம், பல்வேறு யுத்திகளை புகுத்தி.... ஓர் புதுரகமான பிரசங்கங்களையும், கூட்டங்களையும் கோலாகலத்தோடு நடத்தி வருகிறது.*

*ஆதி முதற்கொண்டு நிலைத்திருக்கும் பழமையான சிலுவைக்கோ 'உலகத்தோடு' யாதொரு தொடர்பும் இருந்ததில்லை. வேதம் உயர்த்தும் ஆதி சிலுவை, ஆதாமின் பெருமையான மாம்சத்தின் முன்னேற்ற நடையை தடை செய்து நிறுத்தியது. ஆனால் திரித்துப் பேசும் நவீன சிலுவையின் ஊற்றுக்கண்ணோ, 'தன் சுயத்திற்குப் பிடித்த நன்மைகளை' திரண்ட சமுத்திரமாய் கொண்டதாகும். அந்த பரந்த சமுத்திரத்தில், அகந்தையான 'ஆதாம்' தடையேதுமின்றி தாராளமாய் உலாவி வருகின்றான். இவ்வாறு, தன் ஜீவியத்தின் தன்னல நோக்கம் மாறாமலே, தன் சுய - மகிழ்ச்சியோடு செழிப்புடன் வாழ்ந்து வருகின்றான். ஏனெனில், இன்றைய நவீன சிலுவை பாவ வழியை அடைத்துப் போடுவதற்குப் பதிலாய், அவனை, அவன் சுய விருப்பத்தின்படியான திசைக்கு நயமுடன் திருப்பி மனம் மகிழ வைக்கிறது!*

*இயேசு அறிமுகம் செய்த அந்த ஆதி சிலுவையோ மரணத்தின் சின்னமாய் விளங்குகிறது! ஆம், தேவன் வழங்கும் பூரண இரட்சிப்பு, தனித்தனியாக ஒருவனிடம் கிரியைச் செய்து.... அவனை உருக்குலைத்து, சுயத்தின் மரணத்திற்குள் நடத்தி, பின்பு ஓர் புதிதான தெய்வீக வாழ்க்கைக்குள் அவனை உயிர்த்தெழச் செய்கிறது!*

**இவ்வாறு தேவன் வழங்கும் வாழ்க்கை, வெளிப்பிரகாரமான புதுப்பிக்கப் பட்ட வாழ்க்கையாயிராமல், "மரணமடைந்து பெற்றுக் கொள்ளும்**

வாழ்க்கையாகவே" இருக்கிறது! இந்த ஒப்பற்ற தெய்வீக வாழ்க்கை, இயேசு சுமந்த சிலுவையை உள்ளடக்கியே இருக்கிறது!

ஆனால், இன்றைய நாகரீக உலக பரிசுத்தவான்களோ "**இயேசுவுக்கே சிலுவை.... அவரே மரணமடைந்தார்!**" என, மாற்றிட துணிகரம் கொண்டிருக்கிறார்கள். இனி அடுத்து, இந்த நாகரீக பரிசுத்தவான்கள் "இயேசு மரித்ததைப் பற்றிய" அடுத்த பிரசங்கத்திற்காகவே காத்திருக்கின்றனர்! இவர்கள் கூறுவதெல்லாம் "நாங்களும் முற்றிலுமாய் இரட்சிக்கப்பட விரும்புகிறோம்" .....ஆனால், சிலுவை சுமந்து மரிப்பதென்பது, கிறிஸ்துவோடு இருந்திடட்டும் என தங்கள் இருதயத்தை பூட்டிக்கொள்கிறார்கள். **எங்களுக்கு சிலுவை வேண்டாம்!** எங்கள் சுய - பீடத்தை நாங்கள் மாற்ற மாட்டோம்! 'எங்களுக்கு மரணம்' என்பதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை! என பகிரங்கமாய் கூறி, ஆவிக்குரிய மரணம் தங்களுக்கு சம்பவிப்பது குறித்து அக்கறைப்படாமல்.... இவ்வுலகில் ஓர் சுக ஜீவிய மனுஷீக கிறிஸ்தவத்தையே அணைத்துக் கொள்கிறார்கள்!

கிறிஸ்தவத்தின் போர்வையில், இவர்களுக்குள் ஒளிந்திருக்கும் "சுயத்தை" ஒருவராலும் கண்டுபிடிக்க முடியவில்லையே! சுயத்தை தன்னோடு வைத்துக்கொள்ள விரும்பும் ஒருவன், தன்னை எல்லோரையும் போல நல்லவனாக காட்டிக்கொள்ளத் துடிக்கிறான். ஏதாகிலும், தனக்கென விருப்பம் கொண்டிருந்தால், அதை நிறைவேற்றிட தன்னை தியாகம் செய்திடக் கூடத் தயாராக இருக்கிறான்.... ஆகிலும், தன் சுய - சிங்காசனம் ஒழித்திட மறுக்கிறான்!

மேலும் கிறிஸ்துவை உயர்த்துவது போல் 'மாறுவேடம் பூண்டு' தன் சுயத்தையே அவன் உயர்த்துகிறான்!

**சுயம் கண்டிக்கப்பட மறுத்து, தேவாலய சமூகத்திலும் துணிகரமாய் நிற்கிறான்! இவன் குடிகாரன் கொட்டகையில் இருப்பதைவிட "வேதாகம கான்பரன்ஸ்" கூட்டங்களில் முதன்மையாய் இருப்பதை "தன் சுயத்திற்கு" சுகமாய் எண்ணுகிறான்!**

சுயம் எத்தனை கொடிதானது! அது தேவனுடைய முகத்தை நம்மிடமிருந்து மறைக்கும் ஓர் கொடிய திரை! வெறும் பிரசங்கத்தினால் அல்ல, வல்லமையான ஆவிக்குரிய அனுபவத்தினால் மாத்திரமே இந்த திரை விலகிட முடியும்! 'திரை ஒழிந்திட' தேவனே கிரியை செய்திட வேண்டும்! அந்த மரண கிரியை செய்து முடிக்கவே "சிலுவையை நம்மில்" வரவேற்றிட வேண்டும். முகதாட்சண்யம் இல்லாமல், நம் சுயத்தை சிலுவையின் நியாயத்தீர்ப்புக்கு ஒப்புக் கொடுத்திட வேண்டும்!

*இவ்வாறெல்லாம் செய்யாமல், உங்கள் மாம்சமும், சுயமும் சிலுவையில் அறையப்படாதிருந்தால்....முதலாவது களவாடப்படுவது "உங்கள் இருதயத்தின் பரிசுத்தம்" என்பதை மறவாதிருங்கள்! பிறகு, கிறிஸ்துவின் சாயலுக்கொப்பான குணாதிசயம் ஒழியும்..... ஆவிக்குரிய வெளிப்பாடு அழியும்..... கனியுள்ள வாழ்க்கை சிதறும்..... முடிவில், "உலகத்திற்கு ஒளியாய் உங்களைத் திகழவைக்கும்" தேவனின் முகம் மறையும்!......*

**இந்த கேடான நிலையில், உங்கள் ஸ்தலங்களில் சபைகள் உருவானால், மனுஷீக - மாம்சத்திற்குரிய சபைகளே தோற்றுவிக்கப்படும்! இவ்வித சபைகளில் "கிறிஸ்துவோடு ஏற்றுக்கொள்ளும் மரணத்தை தவிர" மற்ற அனைத்தும், மனுஷீக நல்ல குணாதிசயத்திற்காகவே பிரசங்கிக்கப்படும்!!**

*ஒருமுறை, சிலுவையில் அறையப்பட்ட வாழ்க்கையை பிரசங்கிக்கும் ஒரு முதிர்ச்சியடைந்த பரிசுத்தவானிடம் "போதகர் அவர்களே, சிலுவையில் அறையப்படுவதின் அர்த்தம் என்ன?" என ஒரு வாலிபன் கேட்டான். ஒரு கணம் சிந்தித்த அந்த வயதான பரிசுத்தவான், "சிலுவையில் அறையப்படுவதற்கு மூன்று பகுதிகள் வேண்டும்."* **முதலாவது,** *சிலுவையில் அறையப்படுகிறவன் அந்த ஒரே திசையை மாத்திரமே அவனது முகம் நோக்கிப் பார்க்க வேண்டும், எனக் கூறினார். உண்மைத்தான், அவனைப் பின்னிட்டு அழைக்கும் யாதொரு சத்தத்திற்கும் அவனால் செவிக்கொடுத்திட முடியாது. இவன் எதிர்கொண்ட திசையில்தான் தேவனும், கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியானவரும் நிற்கிறார்கள்! அதோடு சேர்த்து, இவனது பரிசுத்த மாகுதலும், ஆவியில் நிறைந்த வாழ்க்கையும், சபையின் பக்தி விருத்தியும் இந்த திசையில்தான் இருக்கிறது!*

*பின்பு அந்த வயோதிப பரிசுத்தவான் "***இரண்டாவது** *பகுதி, சிலுவையில் இருந்திட விரும்பும் மனுஷன், சிலுவையில் நிலைத்திருக்க வேண்டும்!" எனக் கூறினார். உண்மைதான், மரணத்திற்காக சிலுவையில் ஏறிவிட்ட மனுஷன் தனக்குப் பின்னால் இருக்கும் அனைவரிடமிருந்தும் 'விடை பெற்றே' முன் செல்ல வேண்டும். மெய்யாகவே தன் குரு முன் வைத்த சிலுவையை ஏற்றுக் கொண்டவன் "***எல்லாம் முடிந்தது***" என்ற நிலைக்கு வந்து விடுவான்! இந்த முழு உலகத்திற்கும் தன் முதுகையே காட்டி நிற்பான்! இவன் மாத்திரமே உண்மை கிறிஸ்தவன்!!*

*அந்த வயதான பரிசுத்தவான் அந்த வாலிபனை நோக்கி "நான் கூறும்* **மூன்றாவது** *பகுதியை கேட்டுக்கொள்: நீ சிலுவையில் இருந்தால், உனக்கென்று சொந்தமாய் யாதொரு திட்டங்களும்*

*உன்னிடத்தில் வைத்துக்கொள்ள முடியாது!" என அழுத்தமாய் கூறினார். உண்மைதான், சிலுவையில் இருக்கும் ஒருவனுக்கு அவன் போட்டிருந்த திட்டங்களும் ஒழிந்து விடும்! சுறுசுறுப்பான இவனது சொந்த ஆட்ட - பாட்டங்களும் அழிந்து விடும்!*

**கேளுங்கள்: இவ்வுலகிலேயே மிகச்சிறந்த அழகான வாக்கியம் ஒன்றே ஒன்றுதான்! அது, "நான் கிறிஸ்துவுடனேகூட சிலுவையில் அறையப் பட்டேன்!" எனக்கூறும் வாக்கியமாகும். இந்நிலையில் ஒருவன் நிஜமாய் ருசித்திடும் அனுபவம் யாதெனில், கிறிஸ்து அவனுக்கு சொந்தமாய் மாறுகிறார்! அவனது வாழ்வின் திட்டங்களை கிறிஸ்துவே செய்திடுவார்! அவன் பின்னால், மரணம் கடந்துபோய் கொண்டே இருக்க.... பேரானந்த மான மகிழ்ச்சியும், பரிபூரண ஜீவனும் அவனுக்கு முன் சென்று அவனை நடத்திக்கொண்டே செல்லும்!**

*புதிய உடன்படிக்கையில், இயேசு போதித்த இந்த தியாக சிலுவையைத் தழுவிக் கொள்ளுங்கள்! உத்தம சீஷர்கள், அன்றும் இன்றும் மனதார தழுவி ஏற்றுக்கொண்டது, இயேசு முன்வைத்த இந்த தியாக சிலுவையே ஆகும். ஆகவே, இன்று பிரசங்கிக்கப்படும் பிரபல்ய நூதன சிலுவையை உதறித் தள்ளுங்கள்! தியாக சிலுவை உங்கள் சுயத்தின் வலிமையை வெளியரங்கமாக்கும்! இன்று தாண்டவமாடும் நூதன சிலுவையோ, சுயத்திற்கு களிப்பூட்டும்! தியாக சிலுவை மாம்சத்திற்கு ஆக்கினை கொண்டுவரும்! தீது நோக்கமான மாயமான சிலுவையோ, உங்கள் மாம்சத்திற்கே கிலுகிலுப்பான இன்பம் தரும்! தியாக சிலுவை மாம்சத்தின் திட நம்பிக்கையை உருக்குலையச் செய்திடும்! தான்தோன்றலான மாய சிலுவையோ, மாம்சத்தின் மீது கொண்ட சுய நம்பிக்கைக்கே ஊக்கம் தரும்!* **எந்த சிலுவை வேண்டும்?** *ஆதியிலிருந்த, இயேசு முன்வைத்த, தியாக சிலுவையே உங்கள் பங்காய் இருந்திட தேவன் அருள் புரிவாராக! ஆமென்.*

*– A.W. டோசர்*

---

## 'ஒரு தாயின் அன்பை' தேவனிடமிருந்து பெற்றேன்!

*நான் வெகு அதிகாலையிலேயே எழுந்திருக்கும் பழக்கம் உண்டு. அதிகாலையில் தேவனோடு நடப்பது எனக்கு பேரின்பமாயிருந்தது. ஆகவே, சில நாட்களில் என்னுடைய அலாரம் கடிகாரத்தில் இன்னமும் முன்கூட்டியே எழுவதற்கு நேரத்தை ஒழுங்கு செய்து வைத்திருக்கிறேன். ஆனால், கர்த்தரோ எனக்கு ஒரு நல்ல தகப்பனாகவும் நல்ல மணவாளனுமாயிருந்தபடியால் 'என்னுடைய சரீரத்திற்கு அதிக நேரம் ஓய்வு தேவை' என்பதை உணர்ந்து*

‘அலாரமணி’ என் காதுகளில் விழாதபடி செய்திருந்தார். உண்மை தான், **கர்த்தர் என்னை எழுப்பாமல் தூங்க வைத்தார்!** ஆனால் உண்மையில், நான் தூங்கிக் கொண்டிருந்தாலும், என்னுடைய தூக்கத்தில் கர்த்தர் ஒருவர் மாத்திரமே மனதில் நிலைத்திருந்தார். என் ஆத்துமா, அவரோடு எப்போதும் தங்கியிருந்ததை உணர்ந்தேன்!

இதற்கு முன்பு, சில வருடங்களாய் நான் ‘பாதி - தூக்கம்’ மாத்திரமே தூங்கிய அனுபவம் எனக்கு இருந்தது. நான் உணர்ந்து அறிந்தது என்னவென்றால், சரீரத்தில் நான் தூங்கிக் கொண்டே, என் கண்கள் பாதியாக விழித்திருந்த அனுபவமாய் கண்டேன். அதாவது, என் ஆத்துமா கர்த்தருக்குள் எப்போதும் விழிப்புடன் இருந்தது! பொதுவாக எல்லோருடைய ஜீவியத்திலும் ‘தூக்கம்’ எதைக் குறித்தும் கவனமில்லாமல் தூங்குவதையே ஜனங்கள் அறிந்திருக்கிறார்கள். ஆனால் நான் உணர்ந்தது என்னவென்றால், தூக்க சமயத்தில் தேவனோடு உறவு கொண்ட ஆத்துமா, களவாடப்பட அனுமதிப்பது சரிதானோ? என்பதேயாகும்.

‘ஒரு தாய் தேற்றுவதுபோல’ தேவன் ஒரு தாயாக இருந்து காட்டும், கனிவும், அக்கறையும், தூய்மையும் என் மூலமாகவும் காட்டு வதற்கு தெரிந்து கொண்டார் என்றே உணர்ந்தேன்!

**வேத அறிவும் அதன் தெளிவும் ஒரு ‘வேத - கல்விச்சாலையிலிருந்து’ தோன்றியது என்பதை உணர்ந்து, கர்த்தரைப் பிரியப்படுத்துவது ஒன்றே மேலான இலக்கு! என உணரும் தேவ மாந்தர்களில் பலர், கர்த்தரைத் தேடுவதை நான் கண்டேன்!**

“ஓ கர்த்தாவே, உமக்குப் பிரியமான ஆத்துமாக்களை நீர் அறிவீர்! அவர்களையே நானும் நேசிக்கிறேன்! உமது தயவும், ஒரு தாய்க்கு உள்ள சகல தெய்வ நற்குணமும், உம் மூலமாய் எனக்குள் பாய்ந்திடச் செய்தருளும்! நான் அதுபோன்ற ஆத்துமாக்களை உமக்கென்று ஆதாயம் செய்திட கிருபை தாரும்! பிள்ளைகள், பெற்றோரின் நேசத்தை தேடுவதுபோலவே, **நானும் ஒரு தாயின் நிலையில்** உமது அன்பையும், மன உருக்கத்தையும், திவ்ய நற்குணங்களையும், என்னன்டை வரும் ஆத்துமாக்களுக்கு ஆழமாய் காண்பித்துவிட அருள் செய்தருளும்!” என்றே உள்ளம் கதறி என் ஏக்கமான ஜெபம் ஏறெடுத்தேன்.

மேலும் “உமக்கென்று, என் மூலமாய் ஆதாயமாக்கப்படும் ஆத்துமாக்களுக்குத் தேவையான அனைத்து பரத்தின் செல்வங் களையும் எனக்குத் தந்தருளும்! அதன் மூலமாய், நான் உம்மைப் பின்

*தொடர்வதுபோல, என்னைத் தொடரும் ஆத்துமாக்கள் "உம் வழி காண வேண்டும்! அதன் மூலமாய், நீர் அவர்களை நடத்த வேண்டும்!" என பணிந்து மன்றாடி ஜெபித்தேன்!*

*– மேடம் குயான்*

---

## மனுஷரைப் பிரியப்படுத்தும் 'ஆராதனை கூடாரம்' ஒழியட்டும்!

*"எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பதுபோல ஒன்றை யோசிப்பதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல! எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது!" என பவுல் 2கொரி 3 : 5 - ம் வசனத்தில் உரைத்தார்.*

*எந்த மனுஷனாயிருந்தாலும், அவன் தன்னைக் குறித்தே யோசிப்பவனாய் இருந்தால், அவன் மானிடரில் பெலவீனம் கொண்டவன்! அதுபோலவே, எந்த மனுஷனைப் பிரியப்படுத்த விரும்புகிறவனும்* **'குழியில் கிடப்பவன்'** *என்றே கூற வேண்டும்! ஏனெனில், அந்த செயல் தேவனுக்குத் தரவேண்டிய ஆராதனைக்கு ஒப்பாகும்..... எந்த மனிதனும் நமது ஆராதனைக்குரியவர் அல்லவே!*

*மறுரூபமலையில், தேவ மகிமை பளிச்சிட்டபோது, தங்கள் எஜமானின் சூரியப் பிரகாச முகத்தையும், அவரது வஸ்திரம் வெளிச்சமான வெண்மையாய் மாறியதையும்..... அவரோடு மோசேயும், எலியாவும் காணப்பட்டதைக் கண்டமாத்திரத்தில், இயேசுவுக்கு ஒரு கூடாரம்! மோசேக்கு ஒரு கூடாரம்! எலியாவுக்கு ஒரு கூடாரம்! என மனுஷனுக்குரிய யோசனையின்படி, சீஷர்கள் கவரப்பட்டார்கள்! (மத்.17:4).*

**எவ்வளவு பெரிய தேவ மனிதனானாலும், தேவனுக்கு ஆசரிப்பு கூடார தொழுகை போல், அவர்களுக்கும் 'கூடார தொழுகை' வைப்பது நலமானதல்ல!!**

*மனுஷர் ஆராதனையை தேவன் அருவருக்கிறார்! எந்த உத்தம தேவதாசர்களும் அதை அருவருப்பார்கள்.... அதை ஏற்க மறுத்து ஓடுவார்கள்! மேகம் நிழலிட, அந்த மேகத்தில் அவர்கள் இருவரும் (மோசேயும், எலியாவும்) சீக்கிரத்தில் மறைந்து கொண்டார்கள்! தனக்கு "கிரீடம்" தரவந்த மக்களிடமிருந்து இயேசு ஒளித்துக் கொண்ட மாதிரியை, தாழ்மையான தெய்வதாசர்கள் யாவரும் கடைப்பிடிப்பார்கள்! இந்த உத்தம தேவ தாசர்கள் பத்திரமாய் தான் உள்ளனர்.... ஆனால் இந்த 'மனுஷருக்கேற்றப்படி' சிந்திக்கும் சீஷர்களை நாம் என்னவென்று சொல்வது?*

**இன்று முதல் "இன்னாரைப் பிரியப்படுத்த வேண்டும்!" என எத்தனை கூடாரங்கள் உள்ளதோ, அவை அத்தனையையும் அடியோடு கவிழ்த்துப் போடுங்கள்!**

*உங்கள் இருதயத்தில் தேவன் ஒருவர்தவிர..... அவர் ஒருவரைப் பிரியப்படுத்துவது தவிர, வேறு யாரும் அங்கு வாசமாய் இருந்திடா திருக்க கவனம் கொள்ளுங்கள்! அந்த சுத்த இருதயத்தில் அல்லது அந்த ஆசரிப்புக் கூடாரத்தில், தேவன் மாத்திரமே வாசம் செய்வாராக! அவர் ஒருவரை மாத்திரமே தரிசித்து ஆராதனை செய்யுங்கள்!! இவ்வாறு 'தெய்வ ஆராதனையை' உறுதியாக பற்றிக்கொண்ட இவர்களே பாக்கியவான்கள்!! (மத்தேயு 5:8).*

*– ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்*

---

## மாம்சத்தில் வெளிப்பட்டவரின் மாதிரி அடிச்சுவடு போதுமா?

*கிறிஸ்து செய்த அற்புதங்களைச் சந்தேகிக்கிற அநேகர், தற்காலம் எழும்பியிருக்கிறார்கள். அவரை இரட்சகராக ஏற்றுக்கொள்ளாத வர்கள், அவர் செய்த அற்புதங்களை ஏற்றுக்கொள்வார்கள் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. ஆனால் அவருடைய நாமத்தைத் தரித்தவர்கள் என கூறிக்கொள்ளும் கிறிஸ்தவர்கள், அற்புதங்களை ஒப்புக் கொள்ளாதிருப்பதே இன்று துக்கமான விஷயம்! இவர்களுக்கு அவருடைய ஜீவியமாதிரியும் உபதேசமுமே போதுமாம். விசுவாசிப்பதனால் உண்டாகும் அற்புதங்கள் வேண்டியதில்லையாம். இவர்களில் வேத சாஸ்திர வகுப்பினர்களும் உண்டு. "நீ செய்யக் கூடாததை ஏற்றுக் கொள்ளாதே, நீ காணக்கூடாததை நம்பாதே" என்பது இவர்களின் கொள்கை. அப்படிப்பட்ட கொள்கை, மார்க்கமுமல்ல, சாஸ்திரமுமல்ல! அறிவும் சாஸ்திரமும் பெருகின இக்காலத்தில், தேவ காரியங்களை ஏற்றுக்கொள்வது இவர்களுக்கு கஷ்டமாயிருக்கிறது. இயற்கைக்கு மிஞ்சினதை 'விசுவாசம் என்ற பெயரில்' எப்படி ஏற்றுக்கொள்ளக்கூடும்? என்று கேட்கிறார்கள். சுவிசேஷத்தில், கிறிஸ்துவின் ஜீவியத்தோடு அற்புதங்களும் சேர்ந்திருப்பதற்காக விசனப்படுகிறார்கள்!? எதுவெல்லாம் அறிவுக்கும் புத்திக்கும் மிஞ்சியிருக்கிறதோ அவைகளை ஏற்றுக் கொள்வது நியாயமல்ல என்கிறார்கள். இன்றும் சில கிறிஸ்தவ சபையார் 'கிறிஸ்துவின்' அற்புத பிறப்பைக் கூட நம்பி ஏற்றுக் கொள்வதில்லை!*

*இப்புதிய மாறுபாடு, சபைகளில் எப்படி வந்தது? என்பது ஒரு கேள்வி. கல்வியிற் சிறந்தவர்களும் கீர்த்தி பெற்ற சாஸ்திரிகளும் கிறிஸ்துவைப் பற்றி ஆராய்ச்சி செய்து, அவரது அரிய ஜீவியத்தையும்*

*உபதேசத்தையும் புகழ்ந்தார்கள்! அவரே தேவனைப்பற்றிப் போதிக்கக்கூடிய முதற்தரமான போதகர் என்றும் ஒப்புக் கொண்டார்கள்! இவ்வித தெய்வ வெளிப்பாட்டிலிருந்துதான் இயேசுவைப்பற்றி அநேக ஜீவிய சரித்திரங்கள் பலராலும் எழுதப்பட்டன.*

**இயேசுவின் ஜீவியத்தை எவ்வளவு சிறப்பாக இவர்கள் கூறினபோதிலும், அவரை ஒரு மனுஷனாகவும் நமது ஜீவியத்துக்கு மாதிரியாகவும் 'மாத்திரமே' காண்பித்தார்கள்!**

*இந்த மோசமான சுழல் காற்று, படிப்படியாக சபைகளிலுள்ள போதகர்களையும் வேதசாஸ்திரப் பண்டிதர்களையும் 'மோதி' ஆண்டு கொண்டது! மகா பெரிய கல்விமான்களே அவ்வாறு சொல்லும்போது இவர்கள் என்ன செய்வார்கள்? ஞானிகள் சொல்லுவதை நம்புவதா? செம்படவ சீஷர்கள் சொல்லுகிறதை நம்புவதா? இக்கல்விமான்கள் அறிந்த அவ்வளவு சாஸ்திரமும் 'இயேசுவுக்கே தெரியாதிருக்கும் போது' அவருடைய சீஷர்களுக்கு என்ன தெரியும்?*

**இந்த வேத பண்டித ஞானிகள் 'வாய் திறவாமலே' சொல்வதெல்லாம் "ஏழை மீன்பிடிகாரர் அறிவில்லாமல் தங்கள் குருவை "தெய்வம்" என்று சொல்லி விட்டார்கள். அநேக அற்புதங்களை அவர் செய்ததாகவும், கூறிவிட்டார்கள்" என்பதுதான்.**

*இந்த சுவிசேஷ புகழ் வேத ஞானிகள், ஏழை செம்படவ சீஷர்களின் 'சுவிசேஷத்தை' தள்ளிவிட்டு..... இயற்கைக்கு மிஞ்சினவற்றை நீக்கிவிட்டு... ஏற்றுக்கொள்ளக்கூடியதை மாத்திரம் சுவிசேஷத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டும், என்பது இவர்கள் தாற்பரியம்! ஆகையால் தேவ ஆவியானவர் அருளிய சுவிசேஷத்தை இவர்கள் தள்ளிவிட்டு, அதிலிருந்து வெகு சுருக்கமான சுவிசேஷத்தைத் தங்களுக்கு உண்டு பண்ணிக்கொண்டார்கள். அதற்குச் சுவிசேஷம் என்னும் பேர் தகுமோ? நிச்சயம் தகாது!*

*மக்கள் குழந்தைகளாயிருக்கும்போது தங்கள் தகப்பன் முகத்தைப் பார்த்துப் பிழைத்து, தகப்பனால் தூக்கிச் சுமக்கப்பட்டு, உணவு, உடை, கல்வி யாவற்றையும் பெற்று அனுபவித்து, வளர்ந்து மனுஷராகும்போது தகப்பனைப் பார்த்து: "உங்களுக்கு என்ன தெரியும்? தற்கால நாகரீகமெல்லாம் உங்களுக்கு ஒன்றும் தெரியாது! நீங்கள் கர்நாடகப் போக்காகவே பேசுகிறீர்கள்" என்று சொல்வது போல, இவர்கள் காரியமும் இருக்கிறது. அருமை இரட்சகரே, என் ஆண்டவரே, தேவனே, என் பாவங்களுக்காக வந்து பாடுபட்டு இரத்தம் சிந்தி மரித்தீரே, நான் நீசப்பாவி சுவாமி! என் பாவங்களை*

மன்னித்து என்னை இரட்சித்துக்கொள்ளும் என்று அவர் பாதபடியில் கண்ணீர்விட்டு அழுத காலம் போக, இப்போது தங்களைப் பாவிகள் என்றுகூட ஒத்துக்கொள்ள மனதில்லை! அவரை மாம்சத்தில் வெளிப்பட்ட **கிறிஸ்து அல்லது தெய்வம்** என்றுகூட சொல்ல வெட்கப்படுகிறார்கள். அவர் ஜீவிய மாதிரியைப் பின்பற்றி 'ஏதோ' ஒருவாறு அவரைப்போல் நடக்கிறதாகவும், இவர்களுக்குத் தோன்றுகிறது. தத்துவஞானமும் சாஸ்திர அறிவும் இவர்களுக்கு ஏராளமாய் உண்டு! ஆனால், அவர்களோ அவரது தெய்வீக மகத்துவத்தை மறுதலிக்கும் போலி கிறிஸ்தவர்கள்!

**இவ்வளவு பெருமையில், நாசரேத்தூர் இயேசுவைப் பார்க்கும் போது தாங்களும் அவரும் ஒன்று என்பதுபோல் இவர்களுக்குத் தோன்றுகிறது, "மாம்சத்தில் வெளிப்பட்டவர்" என்ற வாக்கியத்தை அடிக்கோடு போட்டு விட்டு, "அவரைப்போலவே நாங்களும்" என பெருமையில் மார்தட்டுவதும் இவர்களுக்கு அப்படியொரு நப்பாசை!**

சில காரியங்களில் அவரைப் பார்க்கிலும் தாங்கள் விசேஷித்த வர்கள் என்பதுபோலவும் இவர்களுக்குத் தோன்றலாம்! என்னைப் பெற்ற தகப்பனே, நான் பாவி, என்னை இரட்சிக்க வேண்டுமென்று அவர் பாதத்தில் விழுந்து கண்ணீர்விட்டுப் புலம்பின நாளை மறந்து போனார்கள். இவ்வளவு தூரம் தாங்கள் மேன்மையடைந்ததும், கற்றுக்கொண்டதும் அவராலேதான் என்பதை மறந்து, அவரையே கேள்வி கேட்கும் துணிகரம் இவர்களுக்கு உண்டு! தங்கள் பிதாக்களுக்கும் தங்களுக்கும் கிடைத்த கிறிஸ்துமார்க்க ஆசீர்வாதங்கள் சுவிசேஷத்தினால் வந்ததென்பதை நினையாது, அந்த சுவிசேஷத்தையே "தான் என்ற அகந்தையால்" கண்டனம் பண்ணப் புகுந்தார்கள்! **இது அறிவின் இறுமாப்பே அன்றி விசுவாச வளர்ச்சியல்ல.** தற்காலக் கொள்கைக்காரர், கிறிஸ்துவையும் அவர் சுவிசேஷத்தையும் கையாடுகிறவிதம் மகா துணிகரம்!

**ஆகையால், அவர்கள் எவ்வளவு இன்பமாய், பரவசமாய் கிறிஸ்துவின் ஜீவியத்தை மாதிரியாகப் போதித்தாலும், அவர் சரீரத்தில் வெளிப்பட்ட தெய்வம் என்பதையும் இவர்கள் ஏற்றுக்கொள்ளாதிருப்பதால், அவர்களுடைய நளின வார்த்தைகளால் மயங்கிப் போகாதபடி நாம் எச்சரிக்கையாகயிருக்க வேண்டும்.**

அவர்கள் கிறிஸ்துவின் தெய்வீகம் (Divinity) என்று பேசினாலுங் கூட, தெய்வீக விசுவாசத்தை மனதார ஏற்றுக் கொள்வதில்லை! எல்லா மனுஷருக்குள்ளும் தெய்வீகம் இருப்பதுபோலவே, இயேசுவுக் குள்ளும் தெய்வீகம் இருந்ததென்பது அவர்கள் உபதேசம். "அவரையே

*மாதிரியாக வைத்து பின்பற்றுகிறோம்" என அவர்கள் பிரசங்கிக்கிற கிறிஸ்து, சுவிசேஷ கிறிஸ்து அல்ல! அவர்கள் தாங்களே உண்டாக்கிக் கொண்ட கிறிஸ்து! கிறிஸ்துவின் தெய்வீக விசுவாசத்தையும், அற்புதத்தையும் இவர்களின் ஞானம் ஏற்றுக்கொள்வதில்லை! அப்படிப்பட்ட வேறே கிறிஸ்து வானத்திலும் இல்லை, பூமியிலும் இல்லை! ஆகையால் தற்காலக் கொள்கைக்காரர் "***ஆழ்ந்த சத்தியம்" என பிரசங்கிக்கிற** *கிறிஸ்து பொய்! மாதிரியாய் வாழ்ந்த அவரது அடிச்சுவடும் வேண்டும்! பரத்திலிருந்து விளைவிக்கும் தெய்வீக அற்புதமும் வேண்டும்! என்பதே மெய் கிறிஸ்துவும், அவரது உபதேசமும் ஆகும்! ஆமென்.*

*– பரமானந்தம் ஐயர்*

---

## வாழ்ந்த அன்றே மலர்தூவிட மறந்தேன்!

அவள் காட்டிய அன்பின் கரிசனை அறியாது போனேன்!
அவளின் பொறுமையின் மதிப்பையும் அறியாது போனேன்!
அவள் சென்ற பிறகே அறிந்து, மனம் துவண்டு போனேன்!
அவள் நித்தமும் செய்த உதவி ஏராளம், பித்தன் நான் அறிந்திலேன்!
அவள் இன்று இல்லையே... இனி சிந்தித்துதான் என்ன பயன்?
அய்யோ, புன்முறுவலோடு எத்தனை துன்பங்கள் சகித்தாள்!
ஆ, இதமற்ற பாவி நான், உணர்வில்லாது போனேனே!
அவளின் மகிழ்ச்சி கண்டு 'இவளுக்கென்ன?' என இருந்தேனே!
'அன்று' அவளுக்கு உதவிக்கரம் நீட்ட தவறியது என் குற்றம் பெரிதே!
இவள் ஏன் இப்படி ஓடியாடி உழைக்கிறாள்? என சிந்தித்தேன்!
இவளின் மடியில் கிடந்த பொறுப்புகள் ஏராளம்....
இவளின் இன்னல் 'அன்றே அறிந்து' உதவியிருக்க வேண்டும்!
இவளின் இனிய புன்னகை, அனைத்தையும் எனக்கு மறைத்து விட்டதே!
இனி, நான் செய்வதறியாது, தனிமரமாய் வாடுகிறேன்!
இவள் என் சுமை தாங்கி, சுமந்து தவித்து மறைந்தாள்!
இதுகூட அறியாத, உணர்வற்ற ஜென்மம் நான்!
இவளின் இங்கிதம், பொறுமை, உபசரிப்பு, சினேக உள்ளம்....
இத்தனை நற்குணங்களால் என்னைப் பசுமையாக்கினாளே....
இவள் செய்த அந்த சிறுசிறு செயல்களால், என் வாழ்வை,
அத்தனை இலகுவாய் மாற்றி வைத்தாளே!

**அந்தோ, இவை அனைத்தும் அன்றே அறியாது போனேன்!**

**இன்று நான் தவிக்கிறேன்!.... எங்கே என் மனைவி?**

**அவளின் கல்லறைதான் என் காட்சியோ....**

**கலங்குகிறேன், தவிக்கிறேன்!**

**அவள் வாழ்ந்த அன்றே மலர்தூவிட மறந்தேன்!**

**அவள் சென்றுவிட்ட கல்லறையில் மலர்தூவி கொட்டுகிறேன்!**

**பயனேது பயனேது.... அன்றல்லோ கொட்டியிருக்க வேண்டும்!!**

**இறைவா.... என்னை, இந்த நன்றி அறியா மூடனை**

**தயவாய் மன்னியும்!!**

*- Selected*

---

## 'கேட்டவரை' அறிந்திருந்தால், சிறந்ததை கொடுத்திருப்பேன்!

*இங்கிலாந்தின் குடியிருப்பு பகுதிகளில், அவ்வப்போது ஒரு சாதாரண பெண்மணி தோற்றத்தில் இங்கிலாந்து அரசி நடந்து சென்று பார்வையிடுவது வழக்கம்! அவ்வாறு நடந்து சென்ற ஒரு நாளில், திடீரென கனமழை பெய்யத் துவங்கியது! சற்று ஒதுங்குவதற்காக, அருகிலிருந்து ஒரு வீட்டின் தாவாரத்திற்கு இங்கிலாந்து அரசி வந்து நின்றார்கள்.*

*வீட்டுவாசலில் யாரோ வந்து நிற்பதைக் கண்ட அந்த வீட்டுப் பெண்மணி லேசாக கதவைத் திறந்து "யாரம்மா நீ.... இங்கு வந்து நிற்கிறாய்?" என கடுங்கோபத்தோடு சாடினார்கள். தான் யார் என்பதை வெளிக்காட்டாமல் "அம்மணி, தயவாய் ஒரு குடை கொடுத்து உதவ முடியுமா? நான் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்!" என வேண்டிக் கேட்டார்கள். "இங்கேயே நில்லுங்கள், தருகிறேன்!" என எரிச்சலுடன் கூறி, கதவை 'டமார்....' என மூடிச்சென்றார் அந்த அம்மணி! தன் வீட்டிலிருந்த குடைகளில், மிக மோசமான பொத்தல் விழுந்த, கம்பி அறுந்த ஒரு குடையை எடுத்து வந்து, கதவை மீண்டும் லேசாகத் திறந்து "இந்தா குடை!" என நீட்டினார்கள். "நன்றி அம்மணி!" என பணிவுடன் அந்த குடையை இங்கிலாந்து அரசி வாங்கிக் கொண்டு சென்று விட்டார்கள்!*

*அடுத்த நாள் காலையில், அரசு வாகானத்தில் ராணியின் இரண்டு மெய் காப்பாளர்கள், அந்த அம்மணியில் வீட்டு வாசலில் வந்து இறங்கினார்கள். அந்த மெய்காப்பாளர்கள், அரசு சீருடையுடன் கம்பீரத்துடன் நடந்து, அந்த அம்மணி வீட்டுக் கதவைத்*

*தட்டினார்கள். கதவைத் திறந்த அம்மணியிடம், ராணியின் மெய்காப்பாளன் தலை வணங்கி "அம்மணி! இந்த குடைக்காக இங்கிலாந்து அரசி நன்றி கூறுகிறார்கள்!" எனக் கூறி குடையை ஒப்படைத்தார்கள்!*

**அதிர்ச்சியுடன் அந்த பொத்தல் குடையை வாங்கிய அம்மணி "வந்தது அரசி என நான் முன்கூட்டியே அறிந்திருந்தால்.... "மிகச் சிறந்ததை" நான் கொடுத்திருப்பேனே!" என அங்கலாய்ப்புடன் கூறிய சொற்கள் அந்த மெய்காப்பாளனின் செவிகளில் விழுந்தது!!**

*நாம் அனைவரும் ஓர்நாளில், விண்ணரசின் ராஜாவுக்கு முன்பாக நிற்க வேண்டும் என்பதை அறிவோமாக! அன்று தடுமாறி நின்று, ராஜாவின் முகம் காண வெட்கித்து, "என்னைத் தேடி வந்தவர் விண்ணரசின் ராஜா என முன் கூட்டியே அறிந்திருந்தால்.....* **'மிகச் சிறந்ததை'** *நான் அவருக்கென கொடுத்திருப்பேனே!"என சிலர் சஞ்சலத்தோடு கூறும் தொனி அன்று ராஜாவின் சமூகத்தில் எதிரொலிக்கும் என்பது நிச்சயம்! தேவன் நம்மை அன்புகூர்ந்த படியால், தன்னிடமிருந்த மிகச் சிறந்ததை.... 'தனது குமாரனையே' நமக்காக கொடுத்து விட்டார்! அதற்கு மாறுத்துரமாக, நம்மிடமுள்ள 'மிகச் சிறந்ததை விட' குறைவானதை அவருக்கு நாம் தருவது நியாயமா?*

*– இங்கிலாந்து அரசி (குறிப்பேடு)*

---

## சத்திய – சேத திறப்பை 'அடைத்திட' ஒருவனை தேவன் தேடுகிறார்!

எருசலேம் *அலங்கம் (சுவர்) சேதமடைந்த நிலையில், அதை மீண்டும் கட்டியெழுப்பிய நெகேமியாவை நாம் அறிவோம்! அதை மாதிரியாக வைத்தே, எசேக்கியேல் 22:30-ம் வசனத்தில் "சிதைந்து போன சுவரை அல்லது அலங்கம் சிதைந்து ஏற்பட்ட திறப்பை (Gap)" தேவனுடைய பாரிசத்தில் நின்று, அந்த 'திறப்பை' அடைத்திட தேவன் இன்றுவரை, செயல்பட்டு வருகிறார்! சாலமோனின் உன்னதப்பாட்டு புத்தகத்தில், நேசருக்கு உகந்த மணவாளி 'சேதமில்லாத இசைவான மதிலாய் அல்லது சுவராய்' இருக்க வேண்டும்..... அப்படியில்லாமல்,* **மதில் சுவர் 'உடைந்து..... திறப்பாய்' இருந்தால்,** *அதை கேதுரு பலகைகளைக் கொண்டு அடைக்க வேண்டும்! என, 13:9-ம் வசனத்தில் வாசிக்கிறோம். கிறிஸ்துவுக்கு மணவாட்டியாய் திகழவேண்டிய விசுவாச ஸ்திரீகள், நாகரீகம் என்ற பெயரில் 'தகுதியான வஸ்திரம்' உடுத்துவதிலோ, அல்லது எதிர்பாலர் பழக்க நெறியில் சேதமடைந்தால், அதை 'கலாச்சாரம்' என்ற பெயரில்*

*மழுப்பி ஏற்றுக்கொள்ளாமல்,* **‘ஏற்ற புத்திமதி கூறி’ அதை சரிசெய்ய நாடும் தகப்பன், தாய் வேண்டும்!** *நல்ல சகோதரிகள் வேண்டும்! பொறுப்பில்லாமல் ‘புறங்கூறுவதற்குப்’ பதிலாய், அந்த சகோதரியின் குணாதிசய சேதத்தை (திறப்பை) புத்திகூறி அடைத்திடும் உண்மையுள்ள சகோதரிகள் வேண்டும்!*

*புதிய உடன்படிக்கையின் தனித்தனி குத்துவிளக்காய் விளங்கிய 7-சபைகளில், 2 நல்ல சபைகளைத் தவிர, மற்ற 5- சபைகளில் ஏற்பட்ட ‘சேதமடைந்த திறப்பை’ அடைப்பதற்கு ஏற்ற புத்திமதிகளை “சபையின் தூதனுக்கு” தேவன் கூறினார்! (வெளி.2,3). பவுலின் நாட்களில் துர்க்குணமாகிய ‘கொஞ்சம் - Little புளிப்பு’ ஏற்படுவதை அகற்றி, “புளிப்பில்லா அப்பமாய்” கர்த்தருக்கு முன் வாழ புத்தி கூறினார்! ஆனால் நாம் வாழும் இன்றைய விசுவாசிகளில் பெரும்பாலோர், 5% முதல் 90% வரை புளிப்பேறிய துர்க்குணத்தை வைத்து வாழ்ந்து “சுவர் சிதைந்து பெரும் திறப்பு” ஏற்பட்டு விட்டதே! அதைக் களைந்து ‘புளிப்பில்லா அப்பமாய்’ மாற்றுவதற்கு ‘திறப்பில் நின்று’ பாடுபட வேண்டிய காலம் இது!*

**நானும், என் குடும்பமும் பரிசுத்தமாயிருந்தால் போதுமென்று எண்ணாமல், தேவனுடைய காரியமாய் நின்று ‘சேதமடைந்த சத்தியத்தையும், இழந்த அபிஷேகத்தையும்’ பிறருக்காய் மீட்டுத் தருவதற்கு ஜெபிக்கவும், புத்தி சொல்லவும், தூக்கி எடுக்கவும், தேவனுக்கு மனிதர்கள் வேண்டும்!**

*கோலியாத் மூலமாக ‘இஸ்ரவேலுக்கு ஏற்பட்ட நிந்தையைக் கண்ட’ இளையவன் தாவீது, கர்த்தருடைய ஆவியில் நிறைந்து, அவனுக்கு எதிராக ஓடி வீழ்த்தினான்! தாவீது அன்று கண்டது என்னவெனில் “யுத்தம் கர்த்தருடையது!” என்பதுதான் (1சாமு.17:47). ஆகிலும் கர்த்தருடைய நாமத்தில் அன்று அந்த ‘ஒரே தாவீது’ தவிர, இஸ்ரவேலரில் ஒருவரும் தேவனுடைய பாரிசத்தில் நிற்கவில்லை! அந்த தாவீது மூலமாய், இஸ்ரவேலுக்கு நேரிட இருந்த “நிந்தை” அகன்றது. ஆகவேதான், தாவீதை “என் இருதயத்திற்கு ஏற்றவன்!” எனக்கூறி தேவன் மகிழ்ந்தார்! இன்றும் கர்த்தர், நெகேமியாவைப் போல், தாவீதைப்போல், சத்தியத்திற்கு சேதமடைந்த சுவரை அடைத்திட ‘ஒரு மனிதனைத்’ தேடுகிறார்! கிறிஸ்தவ ஊழியம் என்ற பெயரில் விதவித ஊழியங்கள் இருந்தாலும் ‘சத்தியத்திற்கு ஏற்பட்ட சேதத்தின் திறப்பை அடைப்பதற்கு’ ஒரு மனிதனைக் காண்பதுகூட தேவனுக்கு அரிதாகி விட்ட கொடிய காலம் இது! ‘தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவனாய்’ திறப்பின் வாசலில் நிற்கும் அனேகரை தேவன் எழுப்புவாராக!*

*– T. ரத்தினகுமார்*

# ஜான் ஹூப்பர்,
## 'சத்தியம் பேசியதற்காக' உயிரோடு எரிக்கப்பட்டவர்!



(AD 1495 - 1550)

ஆங்கிலேய புராட்டஸ்டண்டு மறுமலர்ச்சி காலத்தில் ஜான் ஹூப்பர் ஓர் தலைசிறந்த சீர்திருத்தவாதியாயிருந்தார். இங்கிலாந்து இராஜ சபையில் நடந்த விழாவில், ஜான் ஹூப்பர் இராஜாவுக்கு முன்பாக ஓர் வல்லமையான பிரசங்கத்தை பிரசங்கித்தார். அவரது பக்தியையும் வேத ஞானத்தையும் கொண்ட அடிப்படையில் கிளவ் செஸ்டர் (Gloucester) என்ற ஓர் பெரிய ஊருக்கு கண்காணி பிஷப்பாக நியமிக்கப்பட்டார். அந்நாட்கள் தொடங்கி, வேத சத்தியத்தை அவர் சென்ற இடமெல்லாம் பிழையில்லாமல் போதித்தார். அவருடைய போதகத்தில் 'சத்தியம்' பேசப்பட்டபடியால், தேசத்திலிருந்த புராட்டஸ்டண்டு சபைகளில் காணப்பட்ட பல மாறுபாடுகளை வெளியே கொண்டு வந்தது. குறிப்பாக "சபையில், பரிசுத்தவான்களின் உறுதிமொழியை" வேதத்திற்கு புறம்பானது என தைரியமாய் கண்டித்தார். அதுபோன்ற வேதத்திற்குப் புறம்பான சடங்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள மறுத்தார். அந்நாட்களிலிருந்த தாமஸ், நிக்கோலஸ், மார்ட்டின் ஆகிய மூத்த பிஷப்மார்கள் "சபையின் கட்டுப்பாட்டிற்கு நீங்கள் அடங்கி கீழ்ப்படியுங்கள்" என வலியுறுத்திக் கூறியதை, தன் விசுவாசத்தினிமித்தம் உறுதிபட மறுத்து விட்டார்!

இதுதவிர, தான் கண்காணியாயிருந்த பணியை சிறப்பாய் நிறைவேற்றி, தனக்கு கீழிருந்த டயோஸியசத்திற்கு சென்று அங்குள்ள போதகமார்களை ஆவிக்குரிய ரீதியாக விசாரித்தார். அவர் சென்று விசாரித்த போதகமார்கள் 311 பேராவார்கள். அதில், 168 போதகமார்களுக்கு மோசேயின் 10 கட்டளைகளைக்கூட வரிசைப்படுத்தி சொல்லத் தெரியவில்லை. 40 போதகமார்கள் கர்த்தருடைய ஜெபம் புதிய ஏற்பாட்டில் எந்த அதிகாரத்தில் இருக்கிறது என சொல்ல முடியவில்லை. இன்னமும் 31 போதகமார்கள் கர்த்தருடைய ஜெபத்தை போதித்தது யார்? என்றுகூட சுட்டிக்காட்டத் தெரியவில்லை. மிகுந்த வேதனையுற்ற ஜான் ஹூப்பர் "இந்த போதகமார்கள் மறுபடியுமாய் வேதத்தை கற்று வருவது நல்லது" என மென்மையாக கண்டித்து, தலைமை ஸ்தானத்தில் ஒப்படைத்து விட்டார். இவ்வாறாக, அவருடைய பொறுப்பிலிருந்த டயோஸிஸ் சிறியதாய் மாறிவிட்டது. கண்காணி பிஷப்பாய் இருக்கும் யாவரும் "ஏழ்மை - எளிமை வாழ்க்கைக்கு" தங்களை அர்ப்பணிக்க வேண்டுமென்று உறுதிபட பிரசங்கித்தார். அப்போது மாத்திரமே அந்நாட்களிலிருந்த கிளவ்செஸ்டர் மண்டலத்தில் வாழும் ஏழை ஜனங்களுக்கு நல்ல மாதிரியாயிருந்து ஊழியம் செய்ய முடியும், என வலியுறுத்தினார்.

இவ்வளவு போதாதா? "ஹூப்பர் ஒரு வேதப்புரட்டர்" என பிஷப் கார்டினர், பிஷப் போனர் இவர்களால் குற்றம் சாட்டப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். தைரியமாய் சத்தியம் உரைத்த அவரது விசுவாசத்திற்காக, 1555-ம் வருடம் உயிரோடு எரிக்கப்பட்டார்!

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## 'ஒரு கழுதை மூலமாய்' சூதாடியை இரட்சித்த தேவன்!

சூதாட்டத்தில் தேர்ச்சிபெற்ற ஒரு துன்மார்க்கன், தனக்கு வர வேண்டிய பணத்தை வசூலித்திட கழுதையின் மேல் ஏறி தன் கிராமத்தினின்று வடதிசை நோக்கிச் சென்றான். கிராமத்தின் எல்லையை அடைந்ததும், கழுதை மேலும் செல்ல மறுத்தது! கழுதையை மேலும் செலுத்த முடியாது போகவே, தென் திசையிலும் தன் கடன்காரர்கள் இருந்ததால், அந்த திசையில் தனது கழுதையை ஓட்டினான். ரஸ்தா தென்மேற்கிலும், தென்கிழக்கிலுமாக பிரியும் இடம் வரை கழுதை அமைதியாகச் சென்றது. ஆனால், தென்மேற்காக அவன் தெரிந்து கொண்ட பாதையில் கழுதை ஒரு அடிகூட முன் செல்ல மறுத்தது! உதைகளும், வசை மொழிகளும், மன்றாட்டுகளும் வீணாயிற்று!

பொறுமை இழந்த சூதாடி, கழுதையை அதின் விருப்பப்படியே போக விட்டான். அப்பொழுது அது, அவனுக்கு கொஞ்சம் கூட சிரமம் அளிக்காது அமைதியாகச் சென்றது. சிறிது நேரத்திற்குள்ளாக கழுதை ஒரு கிராமத்தை வந்தடைந்தது! கழுதை அங்குள்ள தேவாலயத்தின் முகப்புவாசலின் முன் வந்து நின்றது. பின்னர் அவன் சோர்வுடன் கழுதையிலிருந்து இறங்கி, ஆலயத்தின் அருகே சென்றான். வல்லமையான தேவ செய்திகளால் எழுப்புதலடைந்த அந்த கிராமத்து கிறிஸ்தவர்கள் பாடிய கீதங்களின் இன்னிசை அவனைக் கவரவே அவன் தேவ ஆலயத்தினுள் சென்றான். தங்கள் பாவங்களை கண்ணீருடன் அறிக்கையிடுபவரையும், கிறிஸ்துவால் தங்கள் வாழ்க்கையில் பெற்ற சந்தோஷத்தையும், சமாதானத்தையும் குறித்து மலர்ந்த முகத்துடனும், ஒளி வீசும் கண்களுடனும் சாட்சி கொடுப்பவர்களை அவன் அங்கு கண்டான். தேவனது வல்லமையான பிரசன்னத்தில் அவன் தன் பாவங்களைக் குறித்து ஆழமாக உணர்த்தப்பட்டான். தன் பாவ அக்கிரமங்களை சபையில் அறிக்கையிட்டு, தேவன் தமது அதிசயமான கரத்தால் அந்த ஆலயத்திற்குத் தன்னை வழிநடத்தி வந்த விந்தையை எடுத்துரைத்தான். மனந்திரும்பிய அந்த சூதாடி பாவியினிமித்தம், பரலோகத்தில் பேரானந்தம் உண்டாயிற்று! வட மாநில பிராந்தியத்தில், இன்றும் அந்த குக்கிராமம் சாட்சியாக உள்ளது!

- சுவிசேஷ மலர்

பரலோக பொக்கிஷங்கள்

Published and Owned by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by SFA Print (P) Ltd., Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.